98 சதவிகிதப் பணிகள் நிறைவடைந்த நிலையிலும்

தூத்துக்குடி இ.எஸ்.ஐ. மருத்துவமனை - பணியாளர் பற்றாக்குறையால் செயல்படவில்லை!

மக்களவையில் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி குற்றச்சாட்டு!

சென்னை, பிப்.3–

98 சதவிகித பணிகள் நிறைவடைந்த நிலையிலும், பணியாளர் பற்றாக்குறையால் தூத்துக்குடி இ.எஸ்.ஐ. மருத்துவமனை இன்னும் செயல்படவில்லை என கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி மக்களவையில், தூத்துக்குடியில் உள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனையின் பணிகள் 98 சதவீதம் நிறைவடைந்த நிலையிலும், மருத்துவ கண்காணிப்பாளர், வெளிநோயாளிகள் பிரிவு ஊழியர்கள் மற்றும் பிற சேவைப் பணியாளர்கள் உள்ளிட்டோர் இன்னும் நியமிக்கப்படாததால், அந்த மருத்துவமனை செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படவில்லை.

தேவையான பணியாளர்கள் நியமிக்கப்பட்டால், மருத்துவமனை செயல்படத் தொடங்கும். இதுகுறித்து எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அமைச்சர் தெரிவிப்பாரா? என கேட்டுக் கொண்டார்.

"இதற்கு பதிலளித்த தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, மூன்று மாதங்களுக்குள் மருத்துவப் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும், மார்ச் மாத இறுதிக்குள் அந்த மருத்துவமனை செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்றும் தெரிவித்தார்.

அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதி, அமைந்தகரை, 102 வது வார்டில், எம்.கே.மோகன் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.16.41 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிறுத்த நிழற்குடையை மக்கள் பயன்பாட்டிற்காக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மேயர் பிரியா ராஜன் ஆகியோர் துவக்கி வைத்தார். உடன் பகுதிச் செயலாளர் ச.பரமசிவம்,102 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ராணி ரவிச்சந்திரன், 102 வது வட்டச் செயலாளர் பி.சந்திரசேகர், அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர்!

02.02.2026 நிகழ்வுகள்

1. PMEGP திட்டத்தின்கீழ் கடன் பெறுவதை எளிமையாக்குக!

திருச்சி சிவா எம்.பி.

PMEGP திட்டத்தின் கீழ் சிறு கடன்கள் பெறுவதை எளிதாக்க அரசு ஏற்படுத்தியிருக்கும் தீர்வுகள் குறித்து திமுக துணை பொதுச் செயலாளர் திருச்சி. சிவா எம்.பி. மாநிலங்கலவையில் கேள்வி எழுப்பியுள்ளார். பயனாளிகளுக்கு வெளிப்படைத் தன்மையை உறுதி செய்வதற்காக, அனைத்து நிறுவனங்களும் இணைய வேண்டிய ஒருங்கிணைந்த குறை தீர்க்கும் அமைப்பு உருவாக்கப்படுமா என்றும் அதை செயல்படுத்துவதற்கான காலக்கெடு குறித்தும் அவர் கேட்டுள்ளார். இத்திட்டத்தின்கீழ் வட்டி விகிதங்கள் வங்கிகளின் தனிப்பட்ட முடிவுகளுக்கு விடப்படுவது குறித்தும் நிலைக்குழுவின் பரிந்துரையின்படி, அனைத்து பயனாளிகளுக்கும் சமமான கடன் விதிமுறைகளை உறுதி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் அவர் கேட்டுள்ளார்.

2. ரூபாய் மதிப்பை நிலைப்படுத்தல் நடவடிக்கைகள் என்ன?

அரக்கோணம் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி

அமெரிக்க டாலருக்கு நிகரா இந்திய ரூபாயை நிலைப்படுத்த கடந்த 12 ஆண்டுகளில் இந்திய ரிசர்வ் வங்கி செலவிட்ட தொகை எவ்வளவு என அரக்கோணம் திமுக எம்.பி. எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி எழுப்பியுள்ளார். உள்நாட்டு அல்லது உலகளாவிய கட்டணக் கொள்கைகளில் சமீபத்திய மாற்றங்கள், ரூபாயின் மதிப்பு மற்றும் அந்நியச் செலாவணி நிலைத்தன்மையில் ஏதேனும் ஏற்படுத்தியுள்ள தாக்கம் என்ன? இந்திய சந்தைகளில் இருந்து வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் (FIIs) நிகர வெளியேற்றத்தின் அளவு மற்றும் ரூபாயில் அவற்றின் தாக்கம் என்ன? நாணய ஏற்ற இறக்கத்தை நிர்வகிக்கவும் மூலதன வெளியேற்றத்தின் தாக்கத்தைக் குறைக்கவும் அரசாங்கமும் ரிசர்வ் வங்கியும் எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன? எனும் பல்வேறு கேள்விகளை அவர் எழுப்பியுள்ளார்.

3. ஆன்லைன் முதலீடு பண மோசடிகளை தடுக்க நடவடிக்கை என்ன?

தென் சென்னை தமிழச்சி தங்கபாண்டியன்

கிரிப்டோ நாணயங்கள் மற்றும் டிஜிட்டல் சொத்துக்கள் மூலம் நடக்கும் பண மோசடி மற்றும் சட்டவிரோத வர்த்தகங்கள் மூலம் செய்யப்படும் பெரிய முதலீடுகள் குறித்து ஒன்றிய அரசிடம் திமுக மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும் டிஜிட்டல் சொத்துக்கள், கிரிப்டோ நாணயங்கள் மற்றும் NFT ஆகியவற்றின் தவறான பயன்பாட்டைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

4. பாலியல் துன்புறுத்தலில் இருந்து பெண் விளையாட்டு வீரர்களைப் பாதுகாக்க தவறிய ஒன்றிய அரசு

தேனி தங்க தமிழ்செல்வன்

கோவை கணபதி ராஜ்குமார் குற்றச்சாட்டு

கடந்த மாதம் ஃபரிதாபாத்தில் போட்டி தொடர்பாக தங்கியிருந்தபோது தடகள வீரரின் குடும்பத்தினர் அளித்த புகாரின் பேரில், தேசிய அளவிலான துப்பாக்கி சுடும் பயிற்சியாளர் சமீபத்தில் இந்திய தேசிய துப்பாக்கி சங்கத்தால் (NRAI) இடைநீக்கம் செய்யப்பட்டது குறித்து நாடாளுமன்றத்தில் திமுக மக்களவை உறுப்பினர்கள் தங்க தமிழ்செல்வன் மற்றும் கணபதி ராஜ்குமார் கேள்வி எழுப்பியுள்ளனர். மேற்குறிப்பிட்ட பயிற்சியாளருக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்ட வழக்கின் விவரங்கள் என்ன? கடந்த ஐந்து ஆண்டுகளாக பல்வேறு விளையாட்டுகளில் பயிற்சியாளர்களால் இதுபோன்ற பாலியல் வன்கொடுமைக்கு ஆளான தேசிய அளவிலான பெண் வீராங்கனைகளின் மொத்த எண்ணிக்கை மற்றும் இந்த பயிற்சியாளர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? எதிர்காலத்தில் இதுபோன்ற பாலியல் துன்புறுத்தலில் இருந்து தேசிய அளவிலான பெண் விளையாட்டு வீராங்கனைகளைப் பாதுகாக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

5. வங்கி மோசடிகள் மீதான நடவடிக்கை என்ன?

சேலம் செல்வகணபதி

தொடர்ந்து வங்கிகளும் வைப்புத்தொகையாளர்களும் ஏமாற்றப்படுவதை குறித்து திமுக சேலம் மக்களவை உறுப்பினர் செல்வகணபதி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். வங்கி மோசடிகளின் அளவு அதிகரித்து வருகிறது, ஆனால் வழக்குகள் குறைந்து வருகின்றன என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். 2023-24 ஆம் ஆண்டில் ரூ.11,261 கோடியிலிருந்து 2024-25 ஆம் ஆண்டில் மோசடி செய்யப்பட்ட பணத்தின் அளவு ரூ.34,771 கோடியாக உயர்ந்ததுள்ளது என்றும் வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் சம்பந்தப்பட்ட தொகை ஆகியவற்றின் அடிப்படையில், பொதுத்துறை வங்கிகள் இம்மோசடிகளுக்கு உள்ளானவைகளில் முதலிடத்தில் உள்ளன என்பதையும் குறிப்பிட்டு கேள்விகள் எழுப்பியுள்ளார். 2024-25 ஆம் ஆண்டில் அனைத்து வங்கிக் குழுக்களிலும் கண்டறியப்பட்ட க்ரெடிட், டெபிட் கார்டுகள் மற்றும் இணைய மோசடிகளின் எண்ணிக்கை மற்றும் தொகை விவரங்கள் என்ன? என்றும் கேட்டுள்ளார்.

6. தமிழ்நாட்டில் நூலகங்கள் அமைக்குமா ஒன்றிய அரசு?

காஞ்சிபுரம் செல்வம்

திருவண்ணாமலை சி.என்.அண்ணாதுரை

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒன்றிய அரசால் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட புதிய பொது நூலகங்கள், சமூக நூலகங்கள் மற்றும் அறிவு வள மையங்களின் எண்ணிக்கைகள் குறித்தும் 2019 முதல் 2024 வரை தமிழ்நாட்டில் அதிவேக இணையம் மற்றும் டிஜிட்டல் உள்கட்டமைப்புடன் மேம்படுத்தப்பட்ட நூலகங்களின் எண்ணிக்கை குறித்தும் திமுக மக்களவை உறுப்பினரகள செல்வம் மற்றும் சி.என். அண்ணாதுரை கேள்வி எழுப்பியுள்ளனர்.

7. வடமாநில தொழிலாளர்களினால் அதிகரிக்கும் குடிசைப்பகுதிகள். நடவடிக்கை என்ன?

என்.ஆர்.இளங்கோ கேள்வி

பிற மாநிலங்களிலிருந்து, குறிப்பாக பீகார் மாநிலத்திலிருந்து, பெரிய அளவிலான புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் வருகையினால் பெருநகரங்கள் அதிக நெரிசலுக்கும் குடிசைப் பகுதிகளின் பெருக்கத்திற்கும் வழிவகுத்திருக்கிறது என்றும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? என்றும் திமுக எம்.பி. என். ஆர். இளங்கோ கேள்வி எழுப்பியுள்ளார்.

8. ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தில் நிதி ஒதுக்கீட்டில் தாமதம் ஏன்?

ராஜாத்தி சல்மா கேள்வி

ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு நிதி பகிர்வதில் தாமதம் ஏன் என திமுக எம்.பி. ராஜாத்தி சல்மா கேள்வி எழுப்பியுள்ளார். 2020 முதல் ஒன்றிய அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன? கிராமப்புற பெண்களின் வாழ்க்கையில் ஜேஜேஎம் மின் தாக்கத்தை மதிப்பீடு செய்ய ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளதா? இத்திட்டத்தை கிராமப்புற மற்றும் மலைப் பகுதிகளில் செயல்படுத்த அரசு எதிர்கொள்ளும் சவால்கள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

சிறுபான்மையின பெண்கள், கலைஞர்கள் மற்றும் இளைஞர்களின் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கும் PM விகாஸ் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மற்றும் செலவுகள் குறித்து தனது மற்றொரு கேள்வியில் ராஜாத்தி சல்மா கேட்டுள்ளார். இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை மற்றும் திட்டத்தை செயல்படுத்துவதில் அரசு எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

9. மாற்றுத்திறனாளிகளுக்கான கருவிகளுக்கு ஜிஎஸ்டி தள்ளுபடியை நீக்கியது ஏன்?

தஞ்சாவூர் முரசொலி கேள்வி

புதிய ஜி.எஸ்.டி திருத்தத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான பொருட்களின் மீதான 10 சதவீத தள்ளுபடி நீக்கப்பட்டிருப்பது ஏன் என தஞ்சாவூர் திமுக மக்களவை உறுப்பினர் முரசொலி கேள்வி எழுப்பியுள்ளார். மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் சக்கர நாற்காலிகள், செயற்கை உறுப்புகள், செவிப்புலன் கருவிகள், பிரெய்ல் அச்சுப்பொறிகள் போன்ற பொருட்களுக்கான ஜி.எஸ்.டி வரி விகிதம் என்ன? அத்தியாவசியம் என்று தெரிந்தும் அத்தகைய சாதனங்களுக்கு ஜிஎஸ்டி வரியை நீக்காததன் காரணம் என்ன? ஜிஎஸ்டி கவுன்சிலை கலந்தாலோசித்து இவ்வரியை நீக்குவதற்கான காலக்கெடு என்ன?

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளுக்கான அமைப்புகள் மற்றும் ஜிஎஸ்டி விலக்கு கோரும் பிற பங்குதாரர்களிடமிருந்து அரசாங்கம் பரிந்துரைகளைப் பெற்றுள்ளதா? என்றும் அவர் கேட்டுள்ளார்.

10. பெரம்பலூர் மாவட்டத்தில் திறன் மேம்பாட்டுத் திட்டங்களின் செயல்பாடுகள் யாவை?

பெரம்பலூர் அருண் நேரு

பெரம்பலூர் மாவட்டத்தில் பிரதம மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY) திட்டத்தின்கீழ் அங்கீகாரம் பெற்ற அரசு மற்றும் தனியார் பயிற்சி கூடங்களின் விவரங்கள் தொகுதி வாரியாக செயல்பாட்டிலுள்ள பயிற்சி மையங்கள் மற்றும் அவற்றின் பாடத்திட்டங்களின் விவரங்கள் என்ன? கடந்த மூன்று நிதியாண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் பெரம்பலூர் மாவட்டத்தில் PMKVY க்காக வெளியிடப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன? சான்றிதழுக்குப் பிறகு வழங்கப்பட்ட வேலைவாய்ப்பு உதவியின் விவரங்கள் என்ன என PMKVY திட்டம் குறித்து பெரம்பலூர் திமுக மக்களவை உறுப்பினர் அருண் நேரு கேள்வி எழுப்பியுள்ளார்.

11. ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவில் தனியார் நியமனங்கள் ஏன்?

கள்ளக்குறிச்சி மலையரசன் கேள்வி

ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா வங்கியின் நிர்வாக இயக்குநர் (MD) உட்பட மூத்த நிர்வாக பதவிகளுக்கு தனியார் துறையைச் சேர்ந்த வேட்பாளர்களை நியமிக்க அரசாங்கம் அனுமதித்துள்ளது குறித்து கள்ளக்குறிச்சி திமுக எம்.பி. மலையரசன் கேள்வி எழுப்பியுள்ளார். SBI மற்றும் பிற பொதுத்துறை வங்கிகளில் (PSBs) ஏற்கனவே அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் குழு இருக்கும்போது தனியார் நியமனங்களை அனுமதிப்பதற்கான காரணங்கள் என்ன? வெளிப்படைத்தன்மை மற்றும் தகுதி அடிப்படையிலான தேர்வை உறுதி செய்வதற்கு அரசாங்கம் உருவாக்கியிருக்கும் வழிகாட்டுதல்கள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

பொருளாதார ஆய்வறிக்கையைப் புறக்கணித்து விட்டனர்!

ஒன்றிய அரசின் பட்ஜெட் முழுத் தோல்வி!

ஒன்றிய முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. கருத்து!

சென்னை, பிப். 3–

முன்னாள் நிதியமைச்சர் ப. சிதம்பரம் ஒன்றிய பட்ஜெட் குறித்து கூறியதாவது:–

நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனும், ஒன்றிய அரசும் பொருளாதார ஆய்வறிக்கையை முழுமையாகப் புறக்கணித்துவிட்டனர். கடன் வாங்குவதிலும் செலவு செய்வதிலும் தவறில்லை. ஆனால், அரசாங்கம் நிதி ஒருங்கிணைப்பைத் தற்போதைய வேகத்தில் அல்லாமல், மிக விரைவாகச் செய்ய வேண்டும். சுமார் ரூ. 88,000 கோடி நிதி ஒதுக்கி 100 நாள் வேலைத் திட்டத்தில் 50 நாள் தான் வேலை வழங்கப்படுகிறது.

தற்போது வெறும் ரூ. 95,000 கோடி நிதி ஒதுக்கி வி.பி. ஜி. ராம் ஜி திட்டத்தில் எப்படி 125 நாட்கள் வேலை வழங்க முடியும். இந்த பட்ஜெட் எங்கே வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது? இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் பற்றி எங்கே கூறுகிறது?

இந்தியாவுக்கு வரும் நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் ஓட்டம் குறித்த நிச்சயமற்ற நிலை மற்றும் கடந்த பல மாதங்களாகத் தொடரும் வெளிநாட்டுப் பங்கு முதலீடுகளின் வெளியேற்றம் ஆகியவை எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இவ்வாறு ப.சிதம்பரம் எம்.பி. கூறினார்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில்

ரூ.7.05 கோடி செலவில் - கோட்டூர் விளையாட்டுத் திடல்!

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – பி.கே. சேகர்பாபு திறந்து வைத்தனர்!

சென்னை,பிப்.3- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (02.02.2026) சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, கோட்டூர், மாநகராட்சி விளையாட்டுத் திடலை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.7.05 கோடி செலவில் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ள கோட்டூர் விளையாட்டுத் திடலை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் திறந்து வைத்து, பொது மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்து பார்வையிட்டனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் பேசும் போது தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பல்வேறு இடங்களில் புதிய விளையாட்டுத் திட்டங்கள் மற்றும் நவீன சமூக நலக் கூடங்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் தொடர்ந்து சென்னை மாநகராட்சியும், சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமமும் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், இன்று சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோட்டூர் பகுதியில், இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுடனும், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும தலைவருமான பி.கே.சேகர்பாபு அவர்களின் நிதி பங்களிப்புடனும், ரூபாய் 7 கோடியே 5 லட்சம் மதிப்பீட்டில் இந்த விளையாட்டு திடல் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், புதிய வசதிகளாக நிர்வாக அறை, உடற்பயிற்சி கூடம், உள் விளையாட்டு அரங்கம், குத்துச்சண்டை வளாகம், குத்துச்சண்டை பயிற்சி அறை, பார்வையாளர்களுக்கான அமர்விடம், வெளிப்புற உடற்பயிற்சி பகுதி, சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், கண்காணிப்பு கேமராக்கள், 200 மீட்டர் நீள நடைபாதை, இருசக்கர வாகன நிறுத்துமிடம், 20,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர் தேக்கம் மற்றும் 2,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 2 உயர்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுடன், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமத்தின் உயர் அலுவலர்கள், இந்த மண்டலத்தின் வார்டு குழு தலைவர் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டு, இந்த விளையாட்டு திடலை மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தனர்.

ஆயிரக்கணக்கான கோட்டூர் மற்றும் கோட்டூர்புரம் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று, இந்த வசதிகளைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவரும் பயன்பெறும் வகையில் நடைபாதை பயிற்சி, உடற்பயிற்சி, குத்துச்சண்டை பயிற்சி, சிறுவர்களுக்கான விளையாட்டு திடல், கால்பந்து மைதானம் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு அம்சங்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

சுமார் 1.30 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இந்த விளையாட்டு திடலில், 3,200 சதுர அடியில் பல்வேறு கட்டிட வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இரவு நேரங்களிலும் விளையாட்டு திடலை பயன்படுத்தும் வகையில் போதுமான மின்வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இந்த வகையில், சைதாப்பேட்டை கோட்டூர் பகுதி மக்களின் நீண்ட நாள் தேவையான ஒன்று தற்போது வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி. ஆர். பிரியா, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ. பிரகாஷ், இ.ஆ.ப., முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், இ.ஆ.ப., மாநகராட்சி தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃப்தாப் ரசூல், இ.ஆ.ப., அடையார் மண்டலக் குழுத் தலைவர் ஆர்.துரைராஜ், சிஎம்டிஏ தலைமைப் பொறியாளர் வெங்கடேசன், கண்காணிப்பு பொறியாளர் ராஜன்பாபு மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.